மலர்-மகளிர் கல்வி விழிப்புணர்வு மற்றும் உரிமைகள் சங்கம்
பதிவுஎண்: 65/95
16/22F, ஹில் வியூ, களியங்காடு, சுங்கான்கடை. ©: 220960
மலர் - 14
இதழ் - 1
வாசம் - 137
ஆகஸ்ட் - 2008

# இலவச சிறப்பு கல்வி மையம்

பூமிகா அறக்கட்டளை சென்னை சார்பில் சுனாமி பாதித்த பகுதிகளிலுள்ள ஏழைக் குழந்தைகளுக்கு மாலை நேர இலவச சிறப்பு வகுப்புகள் மலர் அமைப்பின் வழியாக நடைபெற்று வருவது நம் அனைவருக்கும் தெரிந்த விஷயம்.

படித்து முடித்து வேலை இல்லாமலோ அல்லது கல்லூரிகளில் படிக்கும் ஏழை இளைஞர்கள் இவ்வகுப்புகளில் ஆசிரியர்களாக பணியாற்றுகிறார்கள். இவர்களுக்கு இது ஒரு வேலைவாய்ப்பு வசதியாக இருக்கிறது. 12-ம் வகுப்பு முதல் எம்.எஸி வரையில் படித்தவர்கள் இவ்வகுப்புகளை நடத்துகிறார்கள்.

கல்வி கற்பிப்பதற்கு வாய்ப்பு கிடைப்பது ஒரு அரிய வாய்ப்பு. இந்த வாய்ப்பை பூமிகா அறக்கட்டளை படித்த இளைஞர்களுக்கு அளித்துள்ளது பாராட்டதக்கது.

நம் மாவட்டத்தில் இரு ஒன்றியங்களில் இவ்வகுப்புகள் நடைபெறுகறிது. இராஜாக்கமங்கலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் 9 வகுப்புகளும், குருந்தன்கோடு ஒன்றியத்தில் 11 வகுப்புகளும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இதில் 3-ம் வகுப்பிலிருந்து 8-ம் வகுப்பு வரைப் பயிலும் 25 மாணவ மாணவிகள் சேர்க்கப்படலாம். சில வகுப்புகளில் பெற்றோர்கள் ஆர்வத்தின் காரணமாக 1-ம் வகுப்பிலிருந்தே சில மாணவர்கள் பங்கேற்றுள்ளனர்.



கடந்த ஆண்டு 20 வகுப்புகள் பூமிகா அறக்கட்டளை உதவியுடன் நடைபெற்றது. 5 முதல் 8 வரை பயிலும் மாணவர்களுக்கு தினப்பாடங்களை எழுதி ஆசிரியர்களிடம் காண்பிக்கவும் படித்து முடித்த பாடங்களை எழுதி ஆசிரியர்கள் ஒப்புதலுக்கான கையொப்பம் ஆசிரியரிடமிருந்து பெறவும் அன்றாட கையேடு கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் குழந்தைகளுக்கு தினசரி டைரி பராமரிக்கும் பழக்கம் உருவாகியுள்ளது. வகுப்பில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் அவருடைய பெயரில் ஒரு தொடர் வைப்புத் தொகை மாதந்தோறும் 5-ம் தியதிக்குள் ரூ. 50 செலுத்த வேண்டும். இதனால் மாணவர்களுக்கு இளம் வயதிலேயே சேமிக்கும் பழக்கத்தை கற்றுக் கொள்ள உதவியாக உள்ளது. ஆசிரியர்கள் தலா ரூ. 100 தொடர் வைப்பு நிதி 5-ம் தியதிக்குள் கட்டி விடுவார்கள். இது கட்டுப்பாட்டுக்கும் ஒழுக்கமான பழக்கத்திற்கும் வழிவகுக்கிறது.

பூமிகா அறக்கட்டளைக்கு மாதந்தோறும் மாவட்டத்திலிருந்து அறிக்கைகள் அனுப்ப வேண்டும். அதில் தொடர் வைப்பு நிதி கட்டிய விபரம், மாணவர்களுடைய வருகைப் பதிவு, மாணவர்களின் முன்னேற்ற அறிக்கை, ஆசிரியர்களுக்கு கொடுத்த சான்று ஆகியவை அனுப்பப்படுகிறது.

இராஜாக்கமங்கலத்திற்கு ஒருங்கிணைப்பாளராக திருமதி. ஜெயந்தியும், குருந்தன்கோட்டிற்கு திருமதி. ஜோஸ் ராணியும் அனைத்து வகுப்புகளுக்கும் கண்காணிப்பாளராக செல்வி. ஜினிதாவும் செயல்படுகின்றனர்.

இந்த வகுப்புகள் சிறப்பாக அமைய வழிகாட்டிகளாக பூமிகா அறக்கட்டளையிலிருந்து திரு. லாசர் மற்றும் திரு. புருஷோத்தமன் ஆகியோர் செயல்படுகின்றனர். மலர் அமைப்பில் இப்பொறுப்பை மலர் மாவட்டத் தலைவர் திருமதி. இரா. ஷெலின்மேரி ஏற்று நடத்துகிறார்.